" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2008ம் ஆண்டு ஜீன் திங்கள் 27-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## சாதாரணக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** ***" பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை***
***மறத்தல் அதனினும் நன்று "***

**பொருள் :** வரம்பு கடந்து பிறர் செய்த தீங்கினை, பொறுக்கமுடியாது போனாலும், பொறுக்க வேண்டும். ஆனால் பிறர் செய்த பிழையை அறவே மறந்துவிடுதல் பொறுத்தலை விடச் சிறந்தது.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

## 1) சி.டபிள்யு.3 / 39181 / 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-1 விதி 19(2)ன் படி 30.5.2008ம் தேதி நடைபெற்ற சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** சுகாதாரக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .412**
**பதிவு செய்யப்பட்டது**

## 2) மநி 1/19639/2008

மதுரை மாநகராட்சி துணை ஆணையாளர் பணியிடத்திற்கு திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் அவர்களை மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பணி உயர்வு செய்து மதுரை மாநகராட்சி துணை ஆணையாளராக பணியமர்த்தி வெளியிடப்பட்டுள்ள அரசாணை நிலை எண்.2299, பொது (சிறப்பு) துறை நாள் : 1.6.2008–னை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், துணை ஆணையாளராக 2.6.2008–ந் தேதி பிற்பகல் பணியேற்றுள்ளார்.

**மாமன்ற தீர்மானம் எண் .413**
**பதிவு செய்யப்பட்டது**

## 3) மநி1/17150/07

மதுரை மாநகராட்சி அயற்பணியின்கீழ் உதவி ஆணையாளர்(கணக்கு) ஆக பணிபுரிந்து வரும் திரு. ந.கேசவதாஸ் அவர்களின் அயற்பணிக் காலத்தினை 19.6.2008 முதல் 18.6.2009 முடிய மேலும் ஒராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து வரப்பெற்றுள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரக செயல்முறை ஆணை எண். பணியாளர் மற்றும் நிர்வாகம் 1(3)2165/2008/-5-ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும்ஆணையாளர் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .414**
**பதிவு செய்யப்பட்டது**

## 4) மநி3/37302/06

அரசாணை எண்.174 நிதி (சம்பளம்) துறை நாள் : 28.4.2008–ன்படி புதிய சுகாதாரக்குழு காப்பீடு திட்டம் 3.6.2008 முதல் அனைத்து அரசு மற்றும் அரசு சார்வு நிறுவனங்களில் செயல்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் மாத ஊதியத்தில் ரூ.10/- பிடித்தம் செய்வதை நிறுத்தம் செய்துவிட்டு ரூ.25/-ஐ ஜுன் 2008 முதல் பிடித்தம் செய்யவும், மேற்படி மருத்துவ காப்பீடு திட்டத்தில் அரசாணையில் கண்டுள்ள விதிகளின்படி மதுரை மாநகராட்சியில் செயல்படுத்தவும், மேற்படி அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .415**
**பதிவு செய்யப்பட்டது**

## 5) ம.பொ. 2 / 32474 / 07

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட 16 நடுநிலைப் பள்ளிகளுக்கு தேவையான தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் (தீர்மானம் எண். 172, நாள். 26.09.07) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தளவாடச் சாமான்கள் சப்ளைக்கு 2007-08 ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி ரூ. 24,12,900/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நாளிதழில் உரிய விளம்பரம் வெளியிட்டு டெண்டர் கோரப்பட்டது. வரப் பெற்ற மூன்று டெண்டர்களில் L 1 டெண்டர்தாரர் M/s. The Madurai Multipurpose Carpentary & Iron Furniture Industrial Units (க.எண். 372, மதுரை ரோடு, செக்காணுாரணி, மதுரை) அவர்கள் மதிப்பீட்டு விலைக்கு 2.47% கூடுதலாக ரூ. 24,80,345/-க்கு கொடுத்துள்ள விலை விகிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 28.02.08 ல் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மேற்கண்ட தளவாடச் சாமான்கள் ஷ நிறுவனத்தினர் சப்ளை செய்ய சப்ளை உத்தரவு வழங்கியுள்ளதை மாமன்றத்தின் பின்னேற்பைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .416**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 6) மபொ2/32475/07

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட 11 மேல்நிலைப் பள்ளிகளுக்கு தேவையான தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் (தீர்மானம் எண். 173, நாள். 26.09.07) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தளவாடச் சாமான்கள் சப்ளைக்கு 2007-08 ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி ரூ. 24,97,750/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நாளிதழில் உரிய விளம்பரம் வெளியிட்டு டெண்டர் கோரப்பட்டது. வரப் பெற்ற மூன்று டெண்டர்களில் L 1 டெண்டர்தாரர் M/s. The Madurai Multipurpose Carpentary & Iron Furniture Industrial Units (க.எண். 372, மதுரை ரோடு, செக்காணுாரணி, மதுரை) அவர்கள் மதிப்பீட்டு விலைக்கு 2.69% கூடுதலாக ரூ. 25,70,015/-க்கு கொடுத்துள்ள விலை விகிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 28.02.08 ல் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மேற்கண்ட தளவாடச் சாமான்கள் ஷ நிறுவனத்தினர் சப்ளை செய்ய சப்ளை உத்தரவு வழங்கியுள்ளதை மாமன்றத்தின் பின்னேற்பைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .417**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 7) ம.பொ. 2 / 32476 / 07

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட 13 உயர்நிலைப் பள்ளிகளுக்கு தேவையான தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் (தீர்மானம் எண். 174, நாள். 26.09.07) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தளவாடச் சாமான்கள் சப்ளைக்கு 2007-08 ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி ரூ. 24,89,150/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நாளிதழில் உரிய விளம்பரம் வெளியிட்டு டெண்டர் கோரப்பட்டது. வரப் பெற்ற மூன்று டெண்டர்களில் L 1 டெண்டர்தாரர் M/s. The Madurai Multipurpose Carpentary & Iron Furniture Industrial Units (க.எண். 372, மதுரை ரோடு, செக்காணூரணி, மதுரை) அவர்கள் மதிப்பீட்டு விலைக்கு 2.62% கூடுதலாக ரூ. 25,61,615/-க்கு கொடுத்துள்ள விலை விகிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 28.02.08 ல் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மேற்கண்ட தளவாடச் சாமான்கள் ஷ நிறுவனத்தினர் சப்ளை செய்ய சப்ளை உத்தரவு வழங்கியுள்ளதை மாமன்றத்தின் பின்னேற்பைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .418**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 8) ம.பொ. 2 / 32477 / 07

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட 27 தொடக்கப் பள்ளிகளுக்கு தேவையான தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் (தீர்மானம் எண். 175, நாள். 26.09.07) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தளவாடச் சாமான்கள் சப்ளைக்கு 2007-08 ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி ரூ. 24,94,550/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நாளிதழில் உரிய விளம்பரம் வெளியிட்டு டெண்டர் கோரப்பட்டது. வரப் பெற்ற மூன்று டெண்டர்களில் L 1 டெண்டர்தாரர் M/s. The Madurai Multipurpose Carpentary & Iron Furniture Industrial Units (க.எண். 372, மதுரை ரோடு, செக்காணூரணி, மதுரை) அவர்கள் மதிப்பீட்டு விலைக்கு 2.56% கூடுதலாக ரூ. 25,63,225/-க்கு கொடுத்துள்ள விலை விகிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 28.02.08 ல் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மேற்கண்ட தளவாடச் சாமான்கள் ஷ நிறுவனத்தினர் சப்ளை செய்ய சப்ளை உத்தரவு வழங்கியுள்ளதை மாமன்றத்தின் பின்னேற்பைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .419**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 9) மநி 1/17722/2000

மதுரை மாநகராட்சி ஆயுர்வேத மருந்தக பணியிடத்தினை நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டுக்கு வைத்துக் கொள்ள அனுமதி அளித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.**252**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 02.12.1998–ன்படி அனுப்பானடி மாநகராட்சி ஆயுர்வேத மருந்தகத்தில் திரு.கே.எஸ்.பாலசுப்பிரமணியன், மருத்துவ அலுவலராக நியமனம் செய்யப்பட்டு 20.3.2000–ம் தேதி முதல் பணிபுரிந்து வருகிறார். இந்த மருத்துவமனையில் உள்ள மருத்துவ அலுவலர் பணியிடத்தினை நிரந்தரமாக வைத்துக் கொள்ள பிரேரணைகள் அனுப்பியதில் அரசு ஆணை எண். 485, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 23.12.2005–ன்படி 20.3.2001 முதல் 19.3.2005 வரை இப்பணியிடத்தினை நீட்டிப்பு செய்ய பின்னேற்பு செய்யப்பட்டிருந்தது. பின்னர் இப்பணியிடத்தினை 20.3.2005 முதல் 19.3.2006 வரையிலும் 20.3.2006 முதல் 19.3.2007 வரையிலும் நீட்டிப்பு செய்து அரசாணைகள் வெளியிடப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து மதுரை மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.**372** நாள்:15.3.2007–ன்படி மதுரை மாநகராட்சி அனுப்பானடி ஆயுர்வேத மருத்துவ அலுவலர் பணியிடத்தினை நிரந்தரமாக வைத்துக் கொள்ள அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டதில் அரசாணை எண்.**208**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 21.5.2008–ல் மேற்கண்ட ஆயுர்வேத மருத்துவ அலுவலர் பணியிடத்தினை 20.3.2007 முதல் 19.3.2009 வரை இரண்டாண்டுகளுக்கு தொடர்ந்து நீட்டிப்பு செய்து அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளதை மாமன்றத்தின் தகவலுக்கும், மதுரை மாநகராட்சி அனுப்பானடி பகுதியில் உள்ள ஆயுர் வேத மருந்தகம் இன்றியமையாததாக உள்ளதால் மேற்படி மருத்துவ அலுவலர் பணியிடத்தினை நிரந்தரமாக வைத்துக் கொள்ள அரசுக்கு மீண்டும் பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண் .420**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) H3/30835/2006**

மதுரை மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கொசுகளை அழிக்க பயன்படும் கொசுப்புழு நாசினி டெமிபாஸ் 50% EC 150 லிட்டர் கொள்முதல் செய்ய உத்தேசித்து, உத்தேச செலவு ரூ.2,10,000க்கு அவசர அவசியத்தை முன்னிட்டு, குறைந்த கால டெண்டர் நோட்டீஸ் வழங்கப்பட்டு மூன்று நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி அடிப்படையில் மிகக்குறைந்த விலைப்புள்ளி அனுப்பி உள்ள பெஸ்டிகோ ஸ்பிரேயிங் சிஸ்டம்ஸ் சென்னை (PESTTCO SPRAYING SYSTEMS CHENNAI) நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று, கொசுப்புழு நாசினி டெமிபாஸ் 50% EC 150 லிட்டர், 19.9.2006-ல், 1லிட்டர் ரூ.1,275/- வீதம் மொத்த தொகை ரூ. 1,91,250/-க்கு அவசரம் அவசியத்தைக்கருதி வாங்கப்பட்டுள்ளதை, ஏற்றுக் கொள்ள, மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .421**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) B 30/ 15875/2006**

மதுரை மாநகராட்சி லாரி நிறுத்துமிடத்தில் உள்ள பல ஆண்டுகளுக்கு மேலாக உபயோகப்படுத்தப்பட்டு தற்போது உபயோகப்படுத்த இயலாத நிலையில் கழிதல் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட 13 டிராக்டர், டிரெய்லர் மற்றும் டிரெய்லர் வாட்டர் டாங்க் வாகன இனங்கள் தற்போது உள்ள நிலையிலேயே /வேளாண்மை பொறியியல் துறை மூலம் உரிய விலை மதிப்பீடு பெற்று ஏலம் / டெண்டர் மூலம் விற்பனை செய்ய மாமன்றத்தின் (தீர்மானம் எண். 116, நாள். 01.06.2005) ஒப்புதல் பெறப்பட்டது. அதன் பேரில் அரசு வேளாண்மை பொறியியல் துறை நிர்வாகப் பொறியாளர் வாகனங்களை ஆய்வு செய்து கழிதல் சான்று மற்றும் மதிப்பீடு நிர்ணயித்து கொடுத்துள்ள மதிப்பீட்டின் பேரில் வாகனங்களை ஏலம் / டெண்டர் மூலம் விற்பனை செய்ய உரிய நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட்டு பல முறை ஏலம் / டெண்டர் கோரியதில் எவரும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக டெண்டர் கொடுக்கவில்லை.

| வ. எண். | கோப்பு எண் | வாகனம் எண் | வாகனத்தின் பெயர் | மாடல் | ஏலம் / டெண்டர் கோரியது | வேளாண்மை பொறியியல் துறை பொறியாளரின் 29.12.2005 ம் தேதிய மதிப்பு (ரூபாய்) | டெண்டர் தொகை (ரூபாய்) | குறைவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1. | B 30/00072/06 | TN 59 C 6060 | டிராக்டர் | 1993 | 6 முறை | 42000 | 9500 | 32500 |
| 2. | B 30/00073/06 | TN 59 C 7337 | டிராக்டர் | 1993 | 6 முறை | 42000 | 12100 | 29900 |
| 3. | B 30/15869/06 | TN 59 D 2062 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 7500 | 21500 |
| 4. | B 30/15870/06 | TN 59 C 7576 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8500 | 19500 |
| 5. | B 30/15871/06 | TN 59 C 6789 | டிரெய்லர் | 1993 | 4 முறை | 28000 | 9000 | 19000 |
| 6. | B 30/15872/06 | TN 59 D 2065 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 7500 | 20500 |
| 7. | B 30/15874/06 | TN 59 C 8000 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8500 | 19500 |
| 8. | B 30/15875/06 | TN 59 C 5678 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8000 | 20000 |
| 9. | B 30/15877/06 | TN 59 D 2063 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 6500 | 21500 |
| 10. | B 30/15878/06 | TN 59 D 2067 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 10000 | 18000 |
| 11. | B 30/15879/06 | TN 59 D 2066 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8000 | 20000 |
| 12. | B 30/15880/06 | TN 59 D 7070 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 9000 | 19000 |
| 13. | B 30/16961/06 | MDA 221 | டிரெய்லர் வாட்டர் டாங்க் | 1993 | 5 முறை | 28000 | 7500 | 12500 |
| | **மொத்தம்** | | | | | **3920000** | **111600** | **273400** |

மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டிற்கு மிகவும் குறைவாக டெண்டர் வரப்பட்டு உள்ளதை அனுமதிக்க இயலாமல் நிராகரிக்கப்பட்டு உள்ளது. கழிதல் வாகனங்கள் நிறுத்தப்பட்டு நீண்ட காலமாவதால் அதன் மதிப்பீடு மேலும் குறையும் நிலையில் உள்ளது - என்ற நிலையில் இவற்றிற்கான மதிப்பீட்டினை உரிய படி மறு நிர்ணயம் செய்து இவற்றை கழிக்க வேண்டியது அவசியமாகிறது என்பதால், “மறுசீராய்வுக் குழு” ஒன்று அமைத்து மேற்கண்ட வாகனங்களுக்கு மதிப்பீடு மறு நிர்ணயம் செய்து இவற்றை கழிதல் செய்யும் நடவடிக்கை எடுக்கலாம் என மாமன்றத்தின் (தீர்மானம் எண். 244, நாள். 28.11.07) ஒப்புதல் பெறப்பட்டது.

அதன் படி மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் வேளாண்மை பொறியியல் துறை உதவிப் பொறியாளர், தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம் உதவிப் பொறியாளர் ஆகியோர் லாரி நிறுத்துமிடத்தில்

வாகனங்களை பார்வையிட்டு, பரிசீலனை செய்து மேற்கண்ட வாகனங்களை எடை போட்டு ஸ்கிராப் நிலையில் உத்தேச மதிப்பீடு தயாரித்து விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டது. அதன் படி டிரெய்லர், டிராக்டர் எடை போடப்பட்டு மொத்த எடை 11895 கிலோவுக்கு மாநகராட்சி மதிப்பு ரூ. 1,90,320/- என நிர்ணயம் செய்து உரிய அறிவிப்பு வெளியிட்டு ஏலம் கோரியதில் ஏலத்தில் கலந்து கொண்ட நான்கு ஏலதாரர்களில் திரு. K. மணிகண்டன் (கதவு எண். 1/10, சிவன்காளை தேவர் தெரு, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்) அவர்கள் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ரூ. 2,08,163/- (ரூபாய் இரண்டு இலட்சத்து எட்டாயிரத்து நூற்றி அறுபத்தி மூன்று மட்டும்) கேட்டுள்ளார். ஏலம் நிபந்தனைப் படி ஏலத் தொகையில் 50% தொகை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

மாநகராட்சி மதிப்பிற்கு ரூ. 17,843/- கூடுதலாக கேட்டுள்ள திரு.K. மணிகண்டன் அவர்கள் ஏலத்தினை ஏற்று கொள்ளவும், ஏலத் தொகையுடன் விற்பனை வரி சேர்த்து செலுத்திய பின்பு அன்னாருக்கு கழிதல் வாகனங்களை டெலிவரி கொடுக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .422**
**மறு ஏலம் விட மாமன்றம் தீர்மானிக்கிறது**

## 12) B 30 / 18610 / 08

மதுரை மாநகராட்சி வைகை குடிநீர் திட்டம் பண்ணைப்பட்டி வைகை குடிநீர் சுத்திகரிக்கும் நிலையத்தில் உள்ள பில்டர் ஹவுஸ், ஆலம் ஹவுஸ், குளோரின் ரூம் மற்றும் வேதியியல் ஆய்வுக் கூடம் ஆகியவற்றில் உள்ள அத்தியாவசியமான பொருட்களான வால்வுகள், பேரிங்குகள் மற்றும் மின் மோட்டார்கள் ஆகியவற்றில் ஏற்படும் சிறுபழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டி உள்ளதால் திரு.N.ரெங்கநாதன், இளநிலை பொறியாளர் (பொ) அவர்களுக்கு ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) தற்காலிகமாக கையிருப்பு தொகை வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .423**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 13) மநு3/09818/07

மதுரை மாநகராட்சி, பொது சுகாதாரப் பிரிவில், தெற்கு மற்றும் கிழக்கு மண்டலங்களில் உள்ள முக்கிய பகுதியான மீனாட்சி அம்மன் கோவில் சுற்றியுள்ள பகுதிகள், இரயில்வே ஸ்டேசன் மற்றும் பெரியார் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில், தினசரி ஏற்படும் குப்பைகளை அகற்றவும் மற்றும் சுகாதார பணியினை செய்யவும், போன்ற சிறப்பு பணியை இரவு 9 மணி முதல் காலை 6 மணி வரை முற்றிலும் தற்காலிகமாக தினகூலி ரூ.**92**/- என்ற விகித்தில், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த **50** நபர்களை மாநகர் நல அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று தற்காலிகமாக பணியில் அமர்த்த உத்தரவு வழங்கியதையும், இதன்படி 08.01.2008 முதல் 05.04.2008 முடிய 89 நாட்களுக்கு பணி செய்ததையும், 06.04.2008 ஒரு நாள். பணி நிறுத்தம் செய்தும், மீண்டும் அதே பணியை தொடர 07.04.2008 முதல் 04.07.2008 முடிய 89 நாட்களுக்கு பணி நீடிப்பு செய்ததற்கு, அனுமதி வழங்கியுள்ளதையும், 08.01.2008 முதல் 29.02.2008 முடிய தினகூலி ரூ.92 வீதமும், 01.03.2008 முதல் 30.04.2008 முடிய தினகூலி ரூ.97/- வீதமும் ஆக மொத்தம் ரூ. **4,91,467**/-ஐ வழங்கியதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .424**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 14) ம.பொ.1/01152/08

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு கட்டுப்பாட்டில் உள்ள லாரிஸ்டாண்ட், ஈகோ பார்க் மற்றும் ராஜாஜி பார்க் ஆகிய இடங்களில் ஒப்பந்த அடிப்படையில் தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் கழகத்தை சார்ந்த (TEXCO – CHENNAI, The Government of Tamilnadu Undertaking) சார்ந்த பணியாளர்கள் கீழ் கண்டுள்ளபடி பணிபுரிந்து வருகின்றார்கள்.

1) ராஜாஜி குழந்தைகள் பூங்கா – எலெக்ட்ரிக் மெக்கானிக் – நபர் 1
2) ஈகோ பார்க் காவலர் (Security Guard) – நபர் 7
3) சுகாதாரப் பிரிவு – ஓட்டுனர் (Driver) – நபர் 7
4) லாரி ஸ்டாண்ட் – ஓட்டுனர் (Driver) – நபர் 5
5) மாநகராட்சி மெக்கானிக் (Mechanic) – நபர் 12
6) லாரி ஸ்டாண்ட் – காவலர் (Security Guard) – நபர் 6

01/04/2006 முதல் டெக்ஸ்கோ பணியாளர்களை நீட்டிப்பு செய்வதை தவிர்த்து மாநகராட்சி செலவினத்தை குறைக்கும் பொருட்டு மாமன்ற தீர்மானம் எண்.**10** நாள் :01/04/2005-ல் தெரிவித்துள்ளபடி ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய வேண்டியது என

தீர்மானிக்கப்பட்டதிற்கிணங்க கோப்பு எண் ம.பொ.1/09579/06 நடவடிக்கை எடுக்கப்பட்டு இவர்களின் ஒப்பந்த காலத்தை 31/03/2006 முடிய முடித்து கடிதங்கள் அனுப்பப்பட்டன.

அந்நிலையில் The Tamil Nadu Ex Sevice Man Employee Welfare Union, Madurai என்ற அமைப்பு ஒப்பந்த காலத்தை முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் W.P.No.2875/2006 தாக்கல் செய்தது, அதன்பின்பு தேர்தல் பணிகள் வந்ததால் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதலுடன் இவர்களின் ஒப்பந்த காலத்தை 1/4/2006 முதல் 31/5/2006 வரை நீடிப்பு செய்யப்பட்டது. இந்நிலையில் TEXCO நிறுவனத்தார் இடைக்கால தடையை பெற்றனர். எனவே அவர்கள் தொடர்ந்து பணியாற்றி வந்தனர். உயர்நீதி மன்ற வழக்கறிஞரின் 22/6/2006-ம் தேதிய கடிதத்தில் (THE HONOURABLE COURT WAS PLEASE ALLOWED WRIT PETITION) என்பதனை தெரிவித்து உத்தரவு கிடைக்கப்பெற்ற பின், அனுப்பி வைப்பதாக தெரிவிக்கப்பட்டதில் நேரில் சென்று விபரம் அறியப்பட்டதில் வழக்கானது மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டது என தெரிவித்து மாநகராட்சி சார்பாக மேல்முறையீடு செய்யலாம் என்று தெரிவித்தார். அதன்பேரில், மேல் முறையீடும் செய்யப்பட்டது. மேல்முறையீடு வழக்கு எண்.320/2006(W.A.No.320/2006) உயர்நீதிமன்ற மேல் முறையீடு வழக்கிலும் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே அவர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார்கள் கோப்பு எண்.மபொ1/10126/06-ல் இப்பொருள் குறித்து முடிவு எடுக்கும்வரை தொடர்ந்து கட்டணப்பட்டியலை வழங்கி வரலாம் என்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 9/6/2007 தேதியில் முன் ஒப்புதல் பெறப்பட்டது. அதனடிப்படையில் டெக்ஸ்கோ நிறுவனத்திடமிருந்து வரப்படும் கட்டணப் பட்டியல்களுக்கு உரிய தொகையினை பழைய விகிதத்திலேயே (Old Rates) தொடர்ந்து, சென்னை டெக்ஸ்கோ நிறுவனத்திற்கு காசோலைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் பப்ளிக் எக்ஸ் சர்வீஸ் மேன் துறை Public (Ex service man) Department அரசாணை எண்.1740/5.11.2007 முதல் புதிய விகதத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அரசாணை பார்வைக்கு வைக்கப்படுகிறது)

எனவே மேற்படி நிறுவனத்திற்கு 1/6/2006 முதல் 20/12/2007 முடிய கட்டணப் பட்டியலுக்கு தொகைகள் வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு கோரியும், மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த பணியாளர்கள் தொடர்ந்து இன்று வரை பணிபுரிந்து வருவதால் தொடர்ந்து கட்டணப் பட்டியல் தொகைகளை புதிய விகிதத்திலேயே தொடர்ந்து வழங்கவும், மேலும் இவர்களின் ஒப்பந்த காலத்தை 31/3/2009 வரை நீடிப்பு செய்வது சம்பந்தமாக மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு** : A) டெக்ஸ்கோ என்பது The Government of Tamilnadu undertaking ஆகும் – அரசு சார்பு நிறுவனம்

B) தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கட்டண விபரம்

1) மெக்கானிக் மாதக் கட்டணம் ரூ.5484+14% சர்வீஸ் சார்ஜ், +5% சர்வீஸ் டாக்ஸ் மொத்தம் ரூ.6565/-
2) டிரைவர் – மாதக் கட்டணம் ரூ.5484+14% சர்வீஸ் சார்ஜ், +5% சர்வீஸ் டாக்ஸ் மொத்தம் ரூ.6565/-
3) காவலர் – மாதக் கட்டணம் ரூ.4248+14% சர்வீஸ் சார்ஜ், +5% சர்வீஸ் டாக்ஸ் மொத்தம் ரூ.5085/-

C) G.O.MS.No.1740 Public (Ex- service man) Department 6/11/2007–ல் கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் 1/10/2007 முதல் செய்யப்பட்டுள்ளது. அரசு ஆணை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

1) மெக்கானிக் மாதக் கட்டணம் ரூ.6796 (8 மணி நேர வேலை) + சர்வீஸ் சார்ஜ் 12%+ சர்வீஸ் டாக்ஸ் 12.36%+ அட்மினிஸ்ட்டிரேடிவ் சார்ஜ் 1.61% மொத்தம் ரூ.8690/-
2) டிரைவர் மாதக் கட்டணம் ரூ.6796 (8 மணி நேர வேலை) + சர்வீஸ் சார்ஜ் 12%+ சர்வீஸ் டாக்ஸ் 12.36%+ அட்மினிஸ்ட்டிரேடிவ் சார்ஜ் 1.61% மொத்தம் ரூ.8690/-
3) காவலர் (Security Gurad) ரூ.5582 (8 மணி நேர வேலை) + சர்வீஸ் சார்ஜ் 12%+ சர்வீஸ் டாக்ஸ் 12.36%+ அட்மினிஸ்ட்டிரேடிவ் சார்ஜ் 1.61% மொத்தம் ரூ.7138/-

**மாமன்ற தீர்மானம் எண் .425**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 15) B30/41421/07

மதுரை மாநகராட்சி, வார்டுகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் செய்ய தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் போதுமான அளவில் இல்லை. எனவே 63 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெறுவதற்கு 2007-08 ம் ஆண்டு தினக்கூலி விலை விகிதத்தில் மதிப்பீடு ரூ. 18,71,100/- (ரூபாய் பதினெட்டு இலட்சத்து எழுபத்தி ஓராயித்து நூறு மட்டும்)க்கு தயாரிக்கப்பட்டு மதிப்பீடு ஒப்புதலுக்கும், தேர்ச்சி திறனற்ற பணியாளர்களை சப்ளை பெறுவதற்கும் டெண்டர் வரவழைக்கவும் மாமன்றத்தின் (தீர்மானம் எண். 260, நாள். 27.12.2007) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதன் பேரில் சிப்பம் I ல் மாநகராட்சி வார்டுகளில் சுமார் 300.00 கி.மீ. நீளமுள்ள குடிநீர், பாதாள சாக்கடை மற்றும் இதர பணிகள் பராமரிப்பு செய்ய தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள்

நாள் ஒன்றுக்கு 63 நபர்கள் வீதம் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்ய உரிய நாளிதழில் விளம்பரம் வெளியிட்டும், இணைய தளத்திலும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிட்டும் டெண்டர் வரவழைக்கப்பட்டதில், வரப் பெற்ற இரண்டு டெண்டர்களின் தொழில் நுட்பம் சான்றுகள் மதிப்பாய்வு குழுவில் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பேரில் விலைப்புள்ளி பரிசீலனை செய்யப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி L 1 ஒப்பந்தக்காரர் M/s. பிரைட் என்விரான்மெண்ட் அவர்னர்ஸ் யூனிட் டிரஸ்ட் ஆப் யூத் (க.எண். 1/6, மேலப் பொன்னகரம் 4வது தெரு, மதுரை - 625 016) நிறுவனத்தார் 2007-08 ம் ஆண்டு விலை விகிதத்திற்கு 2.02% கூடுதலாக கொடுத்துள்ளார். L 1 ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி நடப்பு ஆண்டு 2008-09 விலை விகிதத்திற்கு ஒப்பு நோக்கும் பொழுது 9.09% குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் சப்ளை உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .426**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 16) B30/41422/07

மதுரை மாநகராட்சி, வார்டுகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் செய்ய தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் போதுமான அளவில் இல்லை. எனவே 78 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெறுவதற்கு 2007-08 ம் ஆண்டு தினக்கூலி விலை விகிதத்தில் மதிப்பீடு ரூ.23,16,600/- (ரூபாய் இருபத்தி மூன்று இலட்சத்து பதினொராயிரத்து அறுநூறு மட்டும்)க்கு தயாரிக்கப்பட்டு மதிப்பீடு ஒப்புதலுக்கும், தேர்ச்சி திறனற்ற பணியாளர்களை சப்ளை பெறுவதற்கும் டெண்டர் வரவழைக்கவும் மாமன்றத்தின் (தீர்மானம் எண். 259, நாள். 27.12.2007) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதன் பேரில் சிப்பம் II ல் மாநகராட்சி வார்டுகளில் சுமார் 210.00 கி.மீ. நீளமுள்ள குடிநீர், பாதாள சாக்கடை மற்றும் இதர பணிகள் பராமரிப்பு செய்ய தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு 78 நபர்கள் வீதம் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்ய உரிய நாளிதழில் விளம்பரம் வெளியிட்டும், இணைய தளத்திலும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிட்டும் டெண்டர் வரவழைக்கப்பட்டதில், வரப் பெற்ற இரண்டு டெண்டர்களின் தொழில் நுட்பம் சான்றுகள் மதிப்பாய்வு குழுவில் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பேரில் விலைப்புள்ளி பரிசீலனை செய்யப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி L 1 ஒப்பந்தக்காரர் M/s. பிரைட் என்விரான்மெண்ட் அவர்னர்ஸ் யூனிட் டிரஸ்ட் ஆப் யூத் (க.எண். 1/6, மேலப் பொன்னகரம் 4வது தெரு, மதுரை - 625 016) நிறுவனத்தார் 2007-08 ம் ஆண்டு விலை விகிதத்திற்கு 2.02% கூடுதலாக கொடுத்துள்ளார். L 1 ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி நடப்பு ஆண்டு 2008-09 விலை விகிதத்திற்கு ஒப்பு நோக்கும் பொழுது 9.09% குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் சப்ளை உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .427**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 17) B30/41423/07

மதுரை மாநகராட்சி, வார்டுகளில் குடிநீர் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்ய தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் போதுமான அளவில் இல்லை. எனவே 59 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெறுவதற்கு 2007-08 ம் ஆண்டு தினக்கூலி விலை விகிதத்தில் மதிப்பீடு ரூ. 17,52,300/- (ரூபாய் பதினேழு இலட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரத்து முந்நூறு மட்டும்)க்கு தயாரிக்கப்பட்டு மதிப்பீடு ஒப்புதலுக்கும், தேர்ச்சி திறனற்ற பணியாளர்களை சப்ளை பெறுவதற்கும் டெண்டர் வரவழைக்கவும் மாமன்றத்தின் (தீர்மானம் எண். 261, நாள். 27.12.2007) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதன் பேரில் சிப்பம் III ல் மாநகராட்சி வார்டுகளில் சுமார் 200.00 கி.மீ. நீளமுள்ள குடிநீர் மற்றும் இதர பணிகள் பராமரிப்பு செய்ய தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு 59 நபர்கள் வீதம் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்ய உரிய நாளிதழில் விளம்பரம் வெளியிட்டும், இணைய தளத்திலும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிட்டும் டெண்டர் வரவழைக்கப்பட்டதில், வரப் பெற்ற இரண்டு டெண்டர்களின் தொழில் நுட்பம் சான்றுகள் மதிப்பாய்வு குழுவில் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பேரில் விலைப்புள்ளி பரிசீலனை செய்யப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி L 1 ஒப்பந்தக்காரர் M/s. பிரைட் என்விரான்மெண்ட் அவர்னர்ஸ் யூனிட் டிரஸ்ட் ஆப் யூத் (க.எண். 1/6, மேலப் பொன்னகரம் 4வது தெரு, மதுரை - 625 016) நிறுவனத்தார் 2007-08 ம் ஆண்டு விலை விகிதத்திற்கு 2.02% கூடுதலாக கொடுத்துள்ளார். L 1 ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி நடப்பு ஆண்டு 2008-09 விலை விகிதத்திற்கு ஒப்பு நோக்கும் பொழுது 9.09% குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் சப்ளை உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .428**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 18) B30/41424/07

மதுரை மாநகராட்சி, வார்டுகளில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் செய்ய தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் போதுமான அளவில் இல்லை. எனவே 84 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெறுவதற்கு 2007-08 ம் ஆண்டு தினக்கூலி விலை விகிதத்தில் மதிப்பீடு ரூ. 24,94,800/- (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்து தொண்ணூற்றி நான்காயிரத்து எண்ணூறு மட்டும்)க்கு தயாரிக்கப்பட்டு மதிப்பீடு ஒப்புதலுக்கும், தேர்ச்சி திறனற்ற பணியாளர்களை சப்ளை பெறுவதற்கும் டெண்டர் வரவழைக்கவும் மாமன்றத்தின் (தீர்மானம் எண். 258, நாள். 27.12.2007) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதன் பேரில் சிப்பம் IV ல் மாநகராட்சி வார்டுகளில் சுமார் 250.00 கி.மீ. நீளமுள்ள பாதாள சாக்கடை மற்றும் இதர பணிகள் பராமரிப்பு செய்ய தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு 84 நபர்கள் வீதம் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்ய உரிய நாளிதழில் விளம்பரம் வெளியிட்டும், இணைய தளத்திலும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிட்டும் டெண்டர் வரவழைக்கப்பட்டதில், வரப் பெற்ற இரண்டு டெண்டர்களின் தொழில் நுட்பம் சான்றுகள் மதிப்பாய்வு குழுவில் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் பேரில் விலைப்புள்ளி பரிசீலனை செய்யப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி L 1 ஒப்பந்தக்காரர் M/s. பிரைட் என்விரான்மெண்ட் அவர்னர்ஸ் யூனிட் டிரஸ்ட் ஆப் யூத் (க.எண். 1/6, மேலப் பொன்னகரம் 4வது தெரு, மதுரை - 625 016) நிறுவனத்தார் 2007-08 ம் ஆண்டு விலை விகிதத்திற்கு 2.02% கூடுதலாக கொடுத்துள்ளார். L 1 ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி நடப்பு ஆண்டு 2008-09 விலை விகிதத்திற்கு ஒப்பு நோக்கும் பொழுது 9.09% குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் சப்ளை உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .429</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

## 19) Jn.S. 1/39459/07

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் திட்டத்திற்கு ரூ. 251.81 கோடி திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசால் ஒப்புதல் பெறப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அனுமதி அளிக்கப்பட்ட பணிகள் 6 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் டெண்டர் நடவடிக்கை தனித்தனியாக மேற்கொள்ள மாமன்றத் தீர்மானம் எண். 178, நாள். 27.09.07 அன்று ஒப்புதல் பெறப்பட்டது.

அதன் பேரில் சிப்பம் IV க்கு முதன் முறையாக தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்து 30.11.07 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. கீழ்க்காணும் நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.

M/s. பார்க் ஸ்டோன், புதுக்கோட்டை.

மேற்காணும் நிறுவனம் தொழில் நுட்ப தகுதி பெறாத காரணத்தினால் மறு டெண்டர் வரவழைக்க திறனாய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்டது. அதன் பேரில் இரண்டாவது முறையாக தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்து 23.01.08ல் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. இவ்வழைப்பில் இரண்டு நிறுவனங்களிடமிருந்து கீழ்கண்ட விலைவிகிதம் பெறப்பட்டது.

1) M/s. வி.டி.பி & ஜே.வி. கார்வின்ஸ், பெங்களூர்.
2) M/s. உறிந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட்., மும்பை.

| வ எண் | வேலையின் விபரம் | M/s. வி.டி.பி & கார்வின்ஸ் (JV), பெங்களூர். | M/s. உறிந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிலிட்., மும்பை |
|---|---|---|---|
| 1 | மழைநீர் வடிகால்கள் பகுதிகள் எண். 13,14,15,16,17,18 & 19 ல் மழைநீர் வடிகால் பணிகள் | 735286445<br>(+ 33.62 %) | 749589535<br>(+ 36.22 %) |

மேற்படி நிறுவனங்கள் கொடுத்த விலை விகிதங்கள் மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் ஒப்புதல் வழங்கிய விலை விகிதத்தை விட 33.62% முதல் 36.22 % வரை கூடுதலாக இருந்த காரணத்தினால் மறு டெண்டர் வரவழைக்க திறனாய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்டது.

மூன்றாவது முறையாக 14.03.08 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. அவற்றில் கீழ்க்காணும் இரண்டு நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) M/s. வி.டி.பி & கார்வின்ஸ் (JV), பெங்களூர்.
2) M/s. மைடாஸ் இன்பிரா லிட்., ஹைஉறதராபாத்.

மேற்படி, நிறுவனங்களுக்கு தொழில் நுட்ப தகுதி இருந்த காரணத்தினால் இந்நிறுவனத்தின் விலைப்புள்ளிகள் திறக்கலாம் என திறனாய்வுக் குழுவால் 14.03.2008 அன்று தீர்மானிக்கப்பட்டது. இரண்டு நிறுவனத்தின் விலைப்புள்ளிகள் 19.03.2008 அன்று திறக்கப்பட்டது. இந்நிறுவனங்களிடமிருந்து கீழ்கண்ட விலைவிகிதம் பெறப்பட்டது.

| வ எண் | வேலையின் விபரம் | M/s. வி.டி.பி & கார்வின்ஸ் (JV), பெங்களூர். | M/s.மைடாஸ் இன்பிராலிட்., ஹைதராபாத் |
|---|---|---|---|
| 1 | மழைநீர் வடிகால்கள் பகுதிகள் எண். 13,14,15,16,17,18 & 19 ல் மழைநீர் வடிகால் பணிகள் | 729894802 (+ 32.64 %) | 874091351 (+ 58.85 %) |

இதில் மெசர்ஸ். வி.டி.பி & கார்வின்ஸ் (JV), பெங்களூர் நிறுவனத்தார் மத்திய நகர்ப்புர மேம்பாட்டு அமைச்சகத்தால் ஒப்புதல் வழங்கிய விலை விகிதத்தை விட 32.64 % கூடுதலாக கொடுத்துள்ள காரணத்தினால் மேற்படி நிறுவனத்தாரோடு விலை குறைப்பு தொடர்பாக பேச்சு வார்த்தை செய்யலாம் என திறனாய்வுக் குழுவால் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த விதிகளின்படி குறைந்த விலைவிகிதம் கொடுத்த நிறுவனத்திடம் பேச்சுவார்த்தை நடத்தி விலைகுறைப்பு செய்யலாம் என்கின்ற வழிகாட்டுதலின்படி மெசர்ஸ். வி.டி.பி & கார்வின்ஸ் (JV), பெங்களூர் நிறுவனத்தாரிடம் 20.03.2008 அன்று நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் 32.64% லிருந்து 32.50% விலை குறைப்பு செய்வதாக சம்மதக்கடிதம் கொடுத்துள்ளார்கள்.

மதுரை மாநகராட்சியால் அமைக்கப்பட்ட திறனாய்வுக் குழு மேற்படி விலைவிகிதம் மூன்றாவது அழைப்பில் (3rd Call) பெறப்பட்ட காரணத்தினாலும் மேற்படி நிறுவனத்தார் பேச்சுவார்த்தையில் மூன்றாவது அழைப்பில் கொடுத்த விலைவிகிதத்தை விட 0.14% குறைவாக கொடுத்த காரணத்தினால் குறைக்கப்பட்ட விலைவிகிதத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என தீர்மானித்துள்ளது.

திறனாய்வுக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் மெசர்ஸ். வி.டி.பி & கார்வின்ஸ் (JV), பெங்களூர் நிறுவனத்தார் கொடுத்துள்ள விலைவிகிதத்தை நகராட்சி நிர்வாக ஆணையரின் தலைமையில் உள்ள தமிழ் நாடு அரசு ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிப்பு குழு ஒப்புதலுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத் தீர்மான எண். 352. நாள் 28.03.2008 அன்று ஒப்புதல் வழங்கியது.

நகராட்சி நிர்வாக ஆணையரின் தலைமையில் அமைக்கப்பட்ட தமிழ் நாடு அரசு ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிப்பு குழுவின் 28.04.2008ந் தேதிய கூட்டத்தில் மேற்கானும் விலைவிகிதம் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் மெசர்ஸ். வி.டி.பி & கார்வின்ஸ் (JV), பெங்களூர் நிறுவனத்தார் பேச்சு வார்த்தையில் கொடுத்துள்ள விலைவிகிதம் 2008-09 Schedule of Rateக்கு 18.28% கூடுதலாக உள்ளதால் மேற்படி நிறுவனத்தாருடன் மீண்டும் இரண்டாவது முறையாக விலைகுறைப்பு பேச்சு வார்ததை நடத்த அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்தாருடன் 30.04.2008 அன்று இரண்டாவது முறையாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பேச்சு வார்த்தையில் மேற்படி நிறுவனத்தார் மேலும் 32.50% லிருந்து 31.50% விலை குறைப்பு செய்வதாக சம்மதக்கடிதம் கொடுத்துள்ளார்கள். 2008-09 Schedule of Rates ஒப்பிடும்பொழுது 17.28% கூடுதலாக உள்ளது.

இரண்டாவதுமுறை பேச்சுவார்த்தையில் விலைக்குறைப்பு செய்யப்பட்ட விலைவிகிதம் தமிழ் நாடு அரசு ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிப்பு குழுக்கு 04.06.2008 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இக்குழு M/s. VDB Projects நிறுவனத்தார் இரண்டாவது முறையாக விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள ரூ. 72,15,74,001/- விலைவிகிதத்தை ஏற்கலாம் என்கின்ற முடிவினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும், இத்திட்டத்திற்காக கடன் பெறப்படவுள்ள நிதி நிறுவனத்திடமிருந்து கூடுதலாக ஏற்படும் செலவினத்தையும் கடனாக பெற்று மழைநீர் வடிகால் திட்டத்தை நிறைவேற்ற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .430**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**<u>20)</u>** <u>ந.பொ. 1 / 22192 / 08</u>

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை வழங்குவது குறித்து பரிசீலிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசாணை (நிலை) எண். 6, நாள். 21.01.07 ன் படி உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. இந்த உயர்நிலைக் குழு மாநகாட்சிகள் / நகராட்சிகள் ஏற்று நடத்த வேண்டிய பொறுப்புகள் குறித்து அரசிற்கு பரிந்துரைத்தது. இந்த பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலனை செய்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை வழங்குவது குறித்தும், இப்பொறுப்புகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் அவற்றின் கீழ் வெளியிடப்பட்டுள்ள விதிகளின் வகைமுறைகளுக்குட்பட்டு உரிய முறையில் செயல்படுத்துவதற்கும்அரசாணை (நிலை) எண். 61, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள். 11.04.08 மூலம் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் சமர்ப்பித்து ஃ அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை கடைப்பிடித்து செயல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .431</u>
<u>பதிவு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : **20.6.2008**

* * * * * * *

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2008**ம் ஆண்டு **ஜீன்** திங்கள் **27-ம்** நாள் **வெள்ளிக்கிழமை பகல் 12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) சி.டபிள்யு.2 / 39182 / 2006**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 24.06.2008ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .432**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) பி.1/ 19543 /08**

மதுரை மாநகராட்சியில் ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியர் மேற்கொள்ளும் சிறப்பு சிகிச்சை / அறுவை சிகிச்சைக்கான மொத்த மருத்துவச் செலவினத்தில் **75** விழுக்காடு அல்லது ரூ.50,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை மருத்துவ நலநிதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை எண்.188 நிதி(ஓய்வூதியம்) துறை, நாள் :09.05.2008-ம் தேதிய அரசாணையில் 01.04.2008 முதல் ஓய்வூதியதாரர்களுக்கு சிறப்பு சிகிச்சை / அறுவை சிகிச்சைக்கான மொத்த மருத்துவ செலவினத்தில் 75 விழுக்காடு அல்லது ரூ.50,000/- என்ற உச்சவரம்பினை **75** விழுக்காடு தொகை அல்லது ரூ.1,00,000/-(ஒரு லட்சம்) என உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதற்காக ஓய்வூதியதாரர்களிடம் 01.04.2008 முதல் மாதந்தோறும் ரூ.50/-பிடித்தம் செய்து கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்டுள்ள அரசாணை எண்.188 நிதி (ஓய்வூதியம்) துறை நாள்:09.05.08-னை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .433**
**பதிவு செய்யப்பட்டது.**

**3) ம.பொ.3/ ம.எ.1015 /07- 08**

மதுரை மாநகராட்சியில் மையப்பொறியியல் பிரிவு வார்டு எண்.13, பாரதி உலா ரோடு (அழகர் கோவில் சாலை முதல் புதிய நத்தம் சாலை வரை ) தார்சாலை புதுப்பித்தல் (Reach I L.S. Om to 360m) வேலை செய்ய **2007–08ம்** ஆண்டு மதிப்பீட்டின்படி ரூ.18,00,000/-க்கு இளநிலை பொறியாளரால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேற்கண்ட மதிப்பீடு உதவி செயற்பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதியுடன் ஆணையாளர் அவர்களின் நிர்வாக ஒப்புதல் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்களில் L1-யோகா அன் கோ 1/354-2, ராமசாமி நகர் திருமால்புரம், மதுரை–14 நிறுவனத்தினர் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு 0.48% கூடுதலாக கொடுத்துள்ளதை மதிப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட வேலைக்கு விலைக்குறைப்பு செய்து தருமாறு மதிப்பாய்வுகுழுவில் தீர்மானிக்கப்பட்டது. அதன்பின்னர் மேற்கண்ட நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு வேலை செய்து தர சம்மதக்கடிதம் கொடுத்துள்ளதை மதிப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் ஏற்பு செய்து மதிப்பாய்வுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு மேற்கண்ட நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு

வழங்கப்பட்டு பட்டியலும் வழி செய்யப்பட்டுள்ளது. எனவே, முன் ஒப்புதல் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதல் வேலை துவங்கும் உத்தரவு மற்றும் பட்டியல் வழி செய்யப்பட்டமைக்கும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .434**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 4) ம.பொ.3/ ம.எ.1016 /07- 08

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு வார்டு எண். 13 பாரதி உலாரோடு (அழகர் கோவில் சாலை முதல் புதிய நத்தம் சாலை வரை) தார்சாலை புதுப்பித்தல் (Reach II L.S. 360m to 760m) வேலை செய்ய 2007-2008 ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி ரூ.18,00,000/-க்கு இளநிலை பொறியாளரால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேற்கண்ட மதிப்பீடு உதவி செயற்பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதியுடன் ஆணையாளர் அவர்களின் நிர்வாக ஒப்புதல் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்ட சீலிட்ட டெண்டர்கள் வரப்பெற்றதில் L1 யோகா & கோ 1/354-2/ ராமசாமி நகர் திருமால்புரம் மதுரை -16, நிறுவனத்தினர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.71% கூடுதலாக கொடுத்துள்ளதை மதிப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட வேலைக்கு விலை குறைப்பு செய்து தருமாறு மதிப்பாய்வுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது. அதன் பின்னர் மேற்கண்ட நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு வேலை செய்து தர சம்மத கடிதம் கொடுத்துள்ளதை மதிப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் ஏற்பு செய்து மதிப்பாய்வுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு மேற்கண்ட நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பட்டியலும் வழி செய்யப்பட்டுள்ளது. எனவே முன் ஒப்புதல் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதல் வேலை துவங்கும் உத்தரவு மற்றும் பட்டியல் வழி செய்யப்பட்டமைக்கும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .435**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 5) ம.பொ.4/ 15882 / 08

மதுரை மாநகராட்சி நீச்சல் குளத்தில் அமைந்துள்ள கழிப்பறைகள் மற்றும் குளியலறைகளை பராமரிக்க தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களுடன் தினசரி சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்கு இரண்டு ஊழியர்களை நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.82/-வீதம் (மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் பெற்ற தினக்கூலி ரூ.85/-) M/s. அன்னை தெரசா தொண்டு நிறுவனத்திற்கு 01.06.2007 முதல் 31.03.2008 முடிய மாமன்ற தீர்மானம் எண். 221, நாள் :28.11.07ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே (01.04.2008 to 31.03.2009) முடிய ஆணையாளர் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட அனுமதி உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

மேற்கண்ட முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட அனுமதிக்கும் செலவீனத்தொகைக்கும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .436**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 6) ம.பொ.4/ 13120 / 08

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை வளாகத்தின் நான்கு தளங்களிலும் அமைந்துள்ள 16 கழிப்பறைகளை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்கு 2 ஆண், 2 பெண் பணியாளர்கள் வீதம் சுத்தம் செய்ய தேவையான பினாயில் சோப்பு ஆயில், கிளினிங் பவுடர், மாப்பிங் துணி போன்ற அனைத்து உபகரணங்களுடன் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.75/- வீதம் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற்ற தினக்கூலி தொகை ரூ.85/- ஐ விட குறைவாக ஒப்புக்கொண்டு கொடுக்கப்பட்ட விலைப்புள்ளியை ஏற்று M/s.அன்னை தெரஸா ரூரல் டெவலப்மெண்ட் டிரஸ்ட் நிறுவனத்திற்கு (01.04.07 to 31.03.08 முடிய ) மாமன்ற தீர்மானம் எண்.224 நாள்:28.11.2007ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே (01.04.2008 முதல் 31.03.2009 முடிய) ஓராண்டுக்கு ஆணையாளர் ஒப்புதல் பெற்று அனுமதி வழங்கப்பட்ட உத்தரவுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .437**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) மதி.1/ 22831 / 08**

மதுரை, மேலவெளிவீதி, மேலவாசல் துப்புரவு ஊழியர் குடியிருப்பு இருந்த பகுதியில் பழைய கட்டிடங்களை அப்புறப்படுத்திவிட்டு புதிதாக அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டி துப்புரவு ஊழியர்களுக்கு வழங்கவும், கட்டுமான வேலைகளை துவங்கவும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு இடத்தை ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டது. தற்போது செயற்பொறியாளர் (TNSCB) தமது கடிதம் எண்.905/AE(P)/06 நாள் :20.06.2008–ல் அரசாணை எண்.35, நாள் :17.02.97–ன் பிரகாரம் பிரஸ்தாப இடத்தை நிலக்கிரயம் பெற்றுக்கொண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு உரிமை மாற்றம் செய்து தரும்படி கோருகிறார். பிரஸ்தாப இடம் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான பட்டா நிலமாகும். ஆகவே, மேலே கண்டுள்ள அரசாணையில் பத்தி 3(அ)–ல் குறிப்பிட்டுள்ளபடி அரசின் ஒப்புதல் பெற்று, நிலக்கிரையம் பெற்றுக்கொண்டு மேலவெளிவீதியை ஒட்டி வணிக உபயோகத்திற்காக 1268.ச.மீ. இடம் நீங்கலாக மற்ற பகுதியை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்கலாம். அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி கட்டுமான வேலையை தொடங்க தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .438**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8) மதி.2/ 9863 / 08**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.30, சர்வே வார்டு எண்.V பிளாக் எண்.83, T.S.No.50/3A, 56 மற்றும் 57–ல் நியூ எல்லீஸ்நகர் வைத்தியநாதபுரம் மெயின்ரோட்டையும் மேற்கு பகுதியிலுள்ள கங்காணி லைன் தெருவையும் இணைக்கும்படி மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். மேற்கண்ட இரு சாலைகளுக்கும் இடையில் ஆலவாய் திரு.கந்தசாமி அவர்களுக்கு சொந்தமான பழைய கட்டிடம் உள்ளது. மாமன்ற உறுப்பினர் குறிப்பிடும் இவ்விரு சாலைகளையும் இணைத்தால் கங்காணி லைன் மற்றும் சர்வோதயா நகர் வாழ் மக்கள் மேற்கு மண்டல அலுவலகம், ரெயில்வே நிலையம் மற்றும் பெரியார் பஸ்நிலையத்திற்கு வந்து போக மிகவும் வெகுவாகவும், எளிதாகவும் இருக்கும். ஆகவே, இந்த இணைப்பு சாலைக்காக 92’ X 20’ அளவில் சர்வே எண்.56– ல் உள்ள இடத்தை கையகப்படுத்தி மாநகராட்சிக்கு தரும்படி உள்ளூர் திட்டக்குழுமத்தை கோருவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .439**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**9) மநி.1/ 06036 / 08**

அனைத்திந்திய உள்ளாட்சி அமைப்புகளின் பயிற்சி நிறுவனத்திலிருந்து (ALLSG) மும்பை வரப்பெற்றிருந்து அழைப்பின் பேரிலும் உள்ளாட்சி நிர்வாக ஆணையரின் 14.03.08-ம் தேதிய அனுமதியின் பேரிலும் கடந்த 09.04.2008 முதல் 11.4.2008 வரை ” Sustainable Cities Challenge and Opportunities” என்ற தலைப்பில் அந்தமான் தீவுகளின் தலைநகராமான போர்ட்பிளேயரில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் மதிப்பிற்குரிய துணை மேயர், மற்றும் மாநகராட்சி ஆணையாளர், கண்காணிப்பு பொறியாளர், உதவி ஆணையாளர் (தெற்கு) ஆகிய அலுவலர்கள் கலந்து கொண்டதையும் அதற்கான பயிற்சி கட்டணமாக ரூ.60,000/- செலுத்தப்பட்டதையும் மாமன்றத்தின் தகவலுக்கும் மேற்படி பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டதற்கான போக்குவரத்து செலவுகளை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .440**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**10) <u>ம.நி.1/ 18107/ 06</u>**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு திட்டப் பணிகளுக்கு புதிதாக கீழ்கண்ட விபரப்படி 76 வாகனங்கள் வாங்கப்படவுள்ளது.

| | |
|---|---|
| 1. டிப்பர் லாரிகள் | 7 |
| 2. காம்பேக்டர் லாரி | 4 |
| 3. மண் அகற்றும் டிபிஎஸ் | 4 |
| 4. பாதாள சாக்கடை அடைப்பு அகற்றும் வாகனம் | 4 |
| 5. மினி ரோபோ | 5 |
| 6. டம்பர் பிளேசர் வாகனங்கள் | 47 |
| 7. அலுவலர் பயண வாகனம் | 5 |
| மொத்தம் | 76 |

மேற்கண்ட 76 வாகனங்களை இயக்குவதற்கு தேவைப்படும் 76 ஓட்டுநர்கள் மற்றும் அவசரத் தேவைக்கு 10% கூடுதலாக 8 ஓட்டுநர்கள் மொத்தம் 84 (எண்பத்தி நான்கு) ஓட்டுநர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கவும், மேற்கண்ட திட்டக்காலம் முடியும் வரை 84 வாகன ஓட்டுநர்களுக்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புதுப்பித்தல் திட்ட நிதியிலிருந்து (நிர்வாகம் மற்றும் இதர செலவினங்கள்) (A & OE ) ஊதியம் வழங்கவும் திட்ட காலம் முடிவடைந்த பின்பு மாநகராட்சி நிதியிலிருந்து ஊதியம் வழங்கவும் அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் .441**</u>
<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**</u>

**11) <u>ம.நி.2/ 4473 /07</u>**

மதுரை மாநகராட்சி பொது சார்நிலை பணியிடங்களில் அனுமதிக்கப்பட்ட வாகன ஓட்டுநர் பணியிடங்கள் எண்ணிக்கைகள் : 91 ஆகும்.

இதில் தற்போது 67 வாகன ஓட்டுநர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். இது தவிர கீழ்கண்ட விபரப்படி 102 ஓட்டுநர்கள் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் சப்ளை பெறப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| 1) தனியார் நிறுவன ஓட்டுநர்கள் | – | 52 |
| 2) தனியார் நிறுவன ஆட்டோ ஓட்டுநர்கள் | – | 50 |
| மொத்தம் | | 102 |

மேற்கண்ட தனியார் நிறுவன வாகனம் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் 102 ஓட்டுநர்களுக்கு பதிலாக நிர்வாக நலன் கருதி மதுரை மாநகராட்சியிலேயே 102 ஓட்டுநர் பணியிடங்களை புதிதாக தோற்றுவிக்க அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண் .442**</u>
<u>**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**</u>

**12) JnS4/ 22652 /08**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தில் சாலை போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த சாலை போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த சாலை போக்குவரத்து அபிவிருத்தி திட்ட அறிக்கை (Comprehensive Mobility Plan ) தயாரிக்கப்பட்டு மத்திய அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கென கீழ்கண்ட உபதிட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

1. தனியார் பேருந்து நிறுத்துமிடம் அமைத்தல் (ரூ.60.00கோடி)

   (Development of Omni Bus Terminus)

2. சரக்கு வாகனங்கள் நிறுத்துமிடம் (கோச்சடை) (ரூ.37.00 கோடி)

   (Development of Truck Terminal)

3. பெரியார் பேருந்து நிலையம் எதிரில் அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம்

   (ரூ.25.00 கோடி ) (Development of Multi Level Car Parking -Opp To Periyar Bus Stand )

4. துரித பேருந்து சாலை அமைத்தல் (ரூ.140.00 கோடி) (Bus Rapid Transist System)

மேற்படி திட்டங்கள் தனியார், பொதுமக்கள் பங்களிப்பு (Public Private Partnership) மூலம் செயல்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .443</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

**13) JnS4/ 22653 /08**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் **ஒருங்கிணைந்த சாலை போக்குவரத்து அபிவிருத்தி திட்ட அறிக்கை** (Comprehensive Mobility Plan) தயாரிக்கப்பட்டு மத்திய அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையில் நகரின் மையப்பகுதியில் உள்ள நெரிசலை குறைப்பதற்கென வணிக பகுதிகள் நகரின் வெளிப்பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது. அதன் அடிப்படையில் ஒருங்கிணைந்த வணிக வளாகம் (Shopping Mall) மாட்டுத்தாவணி பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் **நிர்மானித்தல், இயக்குதல் பின் ஒப்படைத்தல்** (Build Operate and Transfer (BOT)) முறையில் செயல்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .444</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

**14) JnS1/ 11256 /08**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தில் சாலை போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த சாலை போக்குவரத்து அபிவிருத்தி திட்ட அறிக்கை (Comprehensive Mobility Plan) ரூ.1675.30 கோடிக்கு தயாரிக்கப்பட்டு மத்திய அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கென உயர்மட்ட சாலைகள், மேம்பாலங்கள், சுரங்க நடைபாதைகள், சாலை சந்திப்புகளை மேம்படுத்துதல், சாலைகளை அகலப்படுத்துதல், இணைப்பு சாலைகள் அமைத்தல், சுற்று சாலைகள் அமைத்தல், நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் சாலை போக்குவரத்து மேம்படுத்தல் ஆகிய திட்டங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, திட்டங்கள் மாநில நெடுஞ்சாலை துறை, தேசிய நெடுஞ்சாலை துறை, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மற்றும் மதுரை மாநகராட்சி ஆகிய துறைகளின் பராமரிப்பில் உள்ள பகுதிக்களுக்கென தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையாகும். எனவே, மேற்படி திட்டங்களில் மதுரை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள பகுதிகளுக்கு செய்யப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்கு

**ஒருங்கிணைந்த சாலை போக்குவரத்து அபிவிருத்தி திட்ட அறிக்கையின் (Comprehensive Mobility Plan)** உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.582.25 கோடி ஆகும்.

மதுரை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள பகுதிகளில் சாலை போக்குவரத்து மேம்பாட்டு திட்டத்தை மட்டும் மாநகராட்சியின் மூலம் செயல்படுத்தவும் மேற்படி திட்ட அறிக்கையில் உள்ள பிற திட்டங்களை சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் செயல்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .445**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**15) JnS2/ 32922 /08**

JnNURM-BSUP திட்டத்தின் கீழ் மேற்குமண்டலம் வார்டு –27 மில் காலனியில் 125 தகுதியுள்ள பயனாளிகள் கண்டறியப்பட்டு அவர்களில் 18 நபர்களுக்கு மட்டும் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதில் 7 நபர்கள் வேலையை ஆரம்பித்து விட்டனர். மற்ற கண்டறியப்பட்ட பயனாளிள் தற்சமயம் சில காரணங்களால் இத்திட்டத்தில் பங்குபெற முன் வரவில்லை.

எனவே, இந்த பகுதியில் மீதியுள்ள 107 இனங்களை அருகில் உள்ள குடிசைப்பகுதியில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு இத்திட்டத்தினை செயல்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .446**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**16) ம.பொ.1/ 16541 /06**

மதுரை மாநகராட்சி மையப்பொறியியல் பிரிவு லாரி நிலைய பராமரிப்பில் 174 வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. குப்பை சேகரிக்கும் பணி, குடிநீர் வாகனம், ஆக்கிரமிப்பு அகற்றுதல், அலுவலர்களின் வாகனங்கள் போன்ற பலதரப்பட்ட வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி வாகனங்கள் பராமரிப்பு செய்வதற்கு மாநகராட்சியில் பலர் பணிபுரிந்து வந்த போதிலும், தற்போது சிலர் பணி ஓய்வு பெற்ற காரணத்தால் காலிபணியிடங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, மேற்படி பணியிடங்களுக்கும், புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளதால், மேற்படி வாகனங்களுக்கும் மெக்கானிக் 13 பேர், ஹெல்பர் 27 பேரும் தேவைப்படுகின்றனர். 29.05.08 மற்றும் 18.06.08–ம் தேதியிட்ட டெக்ஸ்கோ நிறுவனத்தின் கடிதங்களில் மெக்கானிக் மற்றும் ஹெல்பர் மாத ஊதியம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது, மேற்படி கடிதங்களில் தெரிவித்துள்ள விபரங்களின் அடிப்படையில் டெக்ஸ்கோ நிறுவனத்திடமிருந்து 13 மெக்கானிக்குகள், 27 ஹெல்பர்களை சப்ளை செய்து பெற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**ஊதிய விபரம்** :

| | | |
|---|---|---|
| அ) | ஒரு மெக்கானிக் 8 மணி நேர பணிக்கு அடிப்படையில் ஊதியம் | ரூ. 6796.00 |
| | 12% சர்வீஸ் சார்ஜ் | ரூ. 815.52 |
| | | ---------------- |
| | மொத்தம் | ரூ. 7611.52 |
| | இதற்கான 12.36% சர்வீஸ் வரி | ரூ. 940.78 |
| | | ---------------- |
| | மொத்தம் | ரூ. 8552.30 |
| | | or |
| | | ரூ. 8552.00 |
| | | ---------------- |
| ஆ) | ஒரு மெக்கானிக் ஹெல்பர் 8 மணி நேரம் அடிப்படையில் ஊதியம் | ரூ. 5582.00 |

| | |
|---|---|
| 12% சர்வீஸ் சார்ஜ் | ரூ. 669.84 |
| | ---------------- |
| மொத்தம் | ரூ. 6251.8 |
| இதற்கான சர்வீஸ் வரி & 12.36 % சர்வீஸ் சார்ஜ் | ரூ. 722.72 |
| | ----------------- |
| மொத்தம் | ரூ. 7024.56 |
| | or |
| | ரூ. 7025.00 |
| | -------------- |

**மாமன்ற தீர்மானம் எண் .447**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**17) ம.பொ.4/ 22643 /08**

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு வடக்கு மண்டலம் வார்டு எண் 8, அண்ணாநகர் சர்வமத சாலையில் முக உறஸனாத்துல் ஜாரியா ஜீம்-ஆ பள்ளிவாசல் அமைந்துள்ளது. இங்கு தொழுகைக்கு தினந்தோறும் அதிகமாக மக்கள் வந்து செல்வதால் பள்ளி வாசலுக்கு புதிய இலவச குடிநீர் குழாய் இணைப்பு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .448**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

18) **B 30 / 00959 / 08**

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கு 2008-2009-ம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு சாமான்களை முன்னணி நிறுவனங்களிலிருந்து DGS&D விலையில் அல்லது டெண்டர் வரவழைத்து சப்ளை பெற்றுக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.24,77,875/-க்கும் மாமன்றத்தின் (தீர்மானம் எண்.293) நாள் :25.01.2008 ஒப்புதல் பெறப்பட்டது. அதன்படி சோடியம் ஆவி விளக்கு பல்புகள் மற்றும் குழல் விளக்குகள் DGS&SD விலையில் M/s.கிராம்டன் கிரீவிஸ் நிறுவனத்தாரிடம் கொள்முதல் செய்யப்பட்டது. DGS&D விலையில் வராத கீழ்காணும் இனங்களுக்கு தமிழ் நாளிதழ் மற்றும் இணையதளத்தில் டெண்டர் அறிவிப்பு விளம்பரம் வெளியிட்டு 6.6.2008ல் டெண்டர் கோரப்பட்டது. அதன்பேரில் கிழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து டெண்டர் வரப்பட்டுள்ளது.

1. M/s. சாய் என்டர்பிரைசஸ், சென்னை
2. M/s. முருகன் எலக்ட்ரிக்கல் டிரேடர்ஸ், சென்னை

மேற்கண்ட இரண்டு டெண்டர்களின் தொழில் நுட்ப தகுதிகள் மதிப்பாய்வுக்குழுவின் முன் வைத்து பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு டெண்டர்தாரர்களின் விலை விகித கவர் (‘B’) கவர் திறக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி விலை விகித ‘B’ கவர் திறக்கப்பட்டு மதிப்பாய்வுக்குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் மின் உபகரணங்களுக்காக குறைந்த விலை விகிதம் தந்துள்ள L1 டெண்டர்தாரர் M/s.சாய் என்டர்பிரைசஸ், சென்னை நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று சப்ளை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ.எண் | மின் உபகரண விபரம் | ஒன்றின் விலை | எண்ணிக்கை | மொத்ததொகை |
|---|---|---|---|---|
| 1 | 150W SVL Choke | 930.00 | 400 | 372000 |
| 2 | 250W SVL Choke | 1210.00 | 700 | 847000 |
| 3 | 400W SVL Choke | 1540.00 | 64 | 98560 |
| 4 | SVL Ignitor | 150.00 | 1500 | 225000 |
| | | | **மொத்தம்** | **15,42,560/-** |

**மாமன்ற தீர்மானம் எண் .449**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**19) B 30 / 00960 / 08**

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கு 2008-2009 ஆம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு சாமான்களை முன்னணி நிறுவனங்களிடமிருந்து DGS&D விலையில் அல்லது டெண்டர் வரவழைத்து சப்ளை பெற்றுக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.24,23,240/-க்கும் மாமன்றத்தின் (தீர்மானம் எண். 294 நாள்:25.01.2008) ஒப்புதல் பெறப்பட்டது. அதன்படி சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் குழல் விளக்குகள் DGS&D விலையில் M/s.கிராம்டன் கிரிவ்ஸ் நிறுவனத்தாரிடம் கொள்முதல் செய்யப்பட்டது. DGS&D விலையில் வராத கீழ்காணும் இனங்களுக்கு தமிழ் நாளிதழ் மற்றும் இணையதளத்தில் டெண்டர் அறிவிப்பு விளம்பரம் வெளியிட்டு **06.06.2008–**ல் டெண்டர் கோரப்பட்டது. அதன் பேரில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து டெண்டர்கள் வரப்பட்டுள்ளது.

1. M/s. சபரி எலக்ட்ரிக்கல்ஸ் சென்னை
2. M/s. பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ் திருச்சி.

மேற்கண்ட இரண்டு டெண்டர்களின் தொழில்நுட்ப தகுதிகள் மதிப்பாய்வு குழுவின் முன்வைத்து பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு டெண்டர்தாரர்களின் விலைவிகித கவர் (”B”) கவர் திறக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி விலைவிகித ”B” கவர் திறக்கப்பட்டு மதிப்பாய்வு குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் மின் உபகரணங்களுக்காக குறைந்த விலைவிகிதம் தந்துள்ள L1 டெண்டர்தாரர் M/s.சபரி எலக்ட்ரிக்கல்ஸ் சென்னை நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று சப்ளை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ.எண். | மின் உபகரண விபரம் | ஒன்றின் விலை | எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | 150W SVL Choke | 930.00 | 261 | 242730 |
| 2 | 250W SVL Choke | 1210.00 | 816 | 987360 |
| 3 | 400W SVL Choke | 1540.00 | 39 | 60060 |
| 4 | TL Starter | 9.00 | 4000 | 36000 |
| | | | மொத்தம் | 13,26,150/- |

**மாமன்ற தீர்மானம் எண் .450**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 20) B30/ 00961 /08

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கு 2008-2009-ம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு சாமான்களை முன்னனி நிறுவனங்களிடமிருந்து DGS&D விலையில் அல்லது டெண்டர் வரவழைத்து சப்ளை பெற்று கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.24,72,000/-க்கும் மாமன்றத்தின் (தீர்மானம் எண்.295 நாள் **25.01.2008)** ஒப்புதல் பெறப்பட்டது. அதன்படி சோடியம் ஆவி விளக்கு பல்புகள் மற்றும் குழல் விளக்குகள் DGS&D விலையில் M/s.கிராம்டன் கிரீவ்ஸ் நிறுவத்தாரிடம் கொள்முதல் செய்யப்பட்டது. DGS&D விலையில் வராத கீழ்காணும் இனங்களுக்கு தமிழ் நாளிதழ் மற்றும் இணையதளத்தில் டெண்டர் அறிவிப்பு விளம்பரம் வெளியிடப்பட்டு 06.06.2008-ல் டெண்டர் கோரப்பட்டது. அதன் பேரில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து டெண்டர்கள் வரப்பட்டுள்ளது.

1. M/s. மாருதி பைப் டிரேடர், தேனி.
2. M/s. சன்சைன் எலக்ட்ரிக்கல்ஸ், மதுரை.

மேற்கண்ட இரண்டு டெண்டர்களின் தொழில்நுட்ப தகுதிகள் மதிப்பாய்வு குழுவின் முன்வைத்து பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு டெண்டர்தாரர்களின் விலைவிகித கவர் (”B”) கவர் திறக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி விலைவிகித ”B” கவர் திறக்கப்பட்டு மதிப்பாய்வு குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் மின் உபகரணங்களுக்காக குறைந்த விலைவிகிதம் தந்துள்ள L1 டெண்டர்தாரர் M/s.மாருதி பைப் டிரேடர், தேனி நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று சப்ளை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ.எண். | மின் உபகரண விபரம் | ஒன்றின் விலை | எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | 40W TL Choke | 168.00 | 1800 | 302400 |
| 2 | 70W TL Choke | 675.00 | 300 | 202500 |
| 3 | 150W SVL Choke | 930.00 | 288 | 267840 |
| 4 | 250W SVL Choke | 1210.00 | 418 | 505780 |
| 5 | 400W SVL Choke | 1540.00 | 123 | 189420 |
| 6 | 400W M.H Bulb | 950.00 | 55 | 52250 |
| 7 | TL Starter | 9.00 | 3000 | 27000 |
| 8 | SVL ignitor | 150.00 | 1500 | 225000 |
| | | | மொத்தம் | 17,72,190/- |

<u>மாமன்ற தீர்மானம் எண் .451</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

## <u>21) B30/ 31626 /07</u>

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் குடிசை பகுதிகளில் வீடுகள் கட்டும் அப்பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைப்பதற்கும் மற்றும் பொது நிதியில் அமைக்க வேண்டிய புதிய தெருவிளக்குகளுக்காகவும் மின் சேமிப்பை கருத்தில் கொண்டு 2x36W CFL பிட்டிங்குகள் 300 எண்ணமும் 4x24 W T5 பிட்டிங்குகள் 200 எண்ணமும் கொள்முதல் செய்ய டெண்டர் வரவழைக்கலாம் என்பதற்கும் அதற்குரிய செலவினம் ரூ.24,94,000/-க்கு மாமன்றத்தின் (தீர்மானம் எண் 161 நாள் :26.09.07) ஒப்புதலும் பெறப்பட்டது. அதன்படி தமிழ் நாளிதழ் மற்றும் இணையதளத்தில் டெண்டர் அறிவிப்பு விளம்பரம் வெளியிட்டு 03.06.2008ல் டெண்டர் கோரப்பட்டது, அதன்பேரில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து டெண்டர்கள் வரப்பெற்றுள்ளது.

1. M/s. சென்னை லைட்டிங் (பி) லிமிடெட் சென்னை
2. M/s. சபரி எலக்டரிக்கல்ஸ் சென்னை
3. M/s. கே.சி.பி. சிக்ஸ்வெல் பவர் சிஸ்டம் சேலம்

மேற்கண்ட மூன்று டெண்டர்களின் தொழில்நுட்ப தகுதிகள் மதிப்பாய்வுக் குழுவின் முன் வைத்து பரிசீலனை செய்யப்பட்டதில் மூன்று டெண்டர்தாரர்களின் விலை புள்ளி கவர் (”B”கவர்) திறக்க முடிவு செய்யப்பட்டது, அதன்படி விலைபுள்ளி ”B கவர்” திறக்கப்பட்டு மதிப்பாய்வு குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் 2x36W CFL தெருவிளக்கு பிட்டிங்கள் M/s. கே.சி.பி. சிக்ஸ்வெல் பவர் சிஸ்டம் சேலம் நிறுவனத்தார் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார். மற்றும் 4x24 W T5 Street Light Fittings க்கு M/s. சென்னை லைட்டிங் (பி) லிமிடெட் சென்னை நிறுவனத்தார் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார். எனவே மேற்கண்ட இரண்டு L1 டெண்டர்தாரர்களின் விலை விகிதத்தினை ஏற்று சப்ளை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ.எண். | L1 ஒப்பந்ததாரர் | மின் உபகரண விபரம் | ஒன்றின் விலை | எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | M/s. கே.சி.பி. சிக்ஸ்வெல் பவர் சிஸ்டம் சேலம் | 2x36W CFL St.light Fittings | 2290.00 | 300 | 687000.00 |
| 2 | M/s. சென்னை லைட்டிங் (பி) லிமிடெட் சென்னை | 4x24W T5 St.light Fittings | 3950.00 | 200 | 790000.00 |

<u>மாமன்ற தீர்மானம் எண் .452</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

## 22) B30/ 35553 /07

மதுரை மாநகராட்சி அண்ணாமாளிகையில் உள்ள 54.4 கே.வி.ஏ திறன் கொண்ட பழைய ஜெனரேட்டர் முழு திறனில் இயங்காததாலும் தற்சமயம் அண்ணாமாளிகையின் மின்பழு அதிகரித்திருப்பதாலும் மின் வாரியத்திலிருந்து அளிக்கப்படும் மின்சாரம் அடிக்கடி தடைபடுவதாலும் மாநகராட்சி அலுவலக வேலைகள் தடைபடாமல் நடைபெற புதிதாக 180 கே.வி.ஏ. ஜெனரேட்டர் அமைக்க வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று டெண்டர் கோரப்பட்டது. அதன்படி தமிழ்நாளிதழ் மற்றும் இணையதளத்தில் டெண்டர் அறிவிப்பு விளம்பரம் வெளியிட்டு 03.06.2008–ல் டெண்டர் கோரப்பட்டது. அதன் பேரில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து டெண்டர்கள் வரப்பட்டுள்ளது.

1. M/s.ஸ்ரீராம் இஞ்சினியரிங் & எலக்ட்ரிக்கல்ஸ் தூத்துக்குடி
2. M/s.சபரி எலக்ட்ரிக்கல்ஸ் சென்னை.
3. M/s.போனர் எலக்ட்ரிக்கல்ஸ் மதுரை
4. M/s.ராதா எலக்ட்ரிக்கல்ஸ் இஞ்சினியரிங் மதுரை

மேற்கண்ட நான்கு டெண்டர்களின் தொழில்நுட்ப தகுதிகள் மதிப்பாய்வு குழுவின் முன்வைத்து பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு டெண்டர்தாரர்களான M/s.ஸ்ரீராம் இஞ்சினிரியங் & எலக்ட்ரிக்கல்ஸ் தூத்துக்குடி மற்றும் சபரி எலக்ட்ரிக்கல்ஸ் சென்னை நிறுவனத்தார்களின் விலைவிகித ”B” கவர்கள் மட்டும் திறக்க முடிவு செய்யப்பட்டது. மற்ற இரண்டு டெண்டர்தாரர்கள் டெண்டர்விதிகளின்படி இரண்டு உறை முறை பின்பற்றாததால் நிராகரிக்கப்பட்டது. தகுதியுள்ள டெண்டர்தார்களின் விலைவிகிதம் ”B” கவர் திறக்கப்பட்டு மதிப்பாய்வு குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் M/s.ஸ்ரீராம் இஞ்சினியரிங் & எலக்ட்ரிக்கல்ஸ் தூத்துக்குடி நிறுவனத்தார் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார். இன்னாரது விலை விகிதம் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.86% சதவிகிதம் குறைவாக ரூ.16,20,000/-க்கு சப்ளை செய்து அமைத்துத்தர விலைப்புள்ளி தந்துள்ளதால் L.1.டெண்டர்தாரரின் விலை விகிதத்தினை ஏற்று சப்ளை உத்தரவு வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .453</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

## 23) HF1/ 19353 /08

சாலை விபத்துக்கள், மற்றும் பேறுகாலம் தொடர்பாக அவசர சிகிச்சைகள் பெற அரசு மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் போதிய அளவு இருந்தாலும் அவசர சிகிச்சைக்குரிய உரிய நேரத்தில் அனுமதித்திட போதிய ஆம்புலன்ஸ் வாகன வசதிகள் இல்லை. இதனை கருத்தில் கொண்டு அவசரப்பணிகளை திறம்பட செய்திட ஒரு அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், தமிழ்நாடு அரசும், ஹைதராபாத் EMRI நிறுவனமும் இணைந்து Public Private Partnership முறையில் நகராட்சி / மாநகராட்சி பகுதிகளில் நவீன மருத்துவ வசதிகளுடன் கூடிய ஆம்புலன்ஸ் வாகனங்கள் சுகாதாரத்துறை சார்ந்த தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் நிறுவனத்தின் மூலம் டெபாசிட் செய்து வாங்கி இயக்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

நவீன மருத்துவ வசதிகளுடன் கூடிய ஆம்புலன்ஸ் வாகனங்களில் இரண்டு வகைகள் உள்ளன.

1. ALS – (Advanced life Saving) 17.50 லட்சங்கள்
2. BLS – (Basic Life Saving) 11.50 லட்சங்கள்

அனைத்து அவசர சிகிச்சை வழங்க ஒரு ALS வாகனத்திற்கு மூன்று BLS வாகனங்கள் தேவைப்படுகிறது.

முதற்கட்டடமாக மதுரைக்கு 20 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மேற்கண்ட 1:3 என்ற விகிதாசாரத்தின்படி 5 ALS மற்றும் 15 BLS ஆம்புலன்ஸ் வாகனங்கள் தேவைப்படுகின்றன. இதற்கு ஆகும் செலவு ரூ2.60 கோடி ஆகும். மேற்கண்டவைகளுக்கு ஏற்படும் பராமரிப்பு செலவுகள் மற்றும் தொடர் செலவுகள் EMRI நிறுவனத்தின் மூலம் செய்யப்பட இருப்பதால், மாநகராட்சிக்கு தொடர் செலவுகள் ஏற்படாது. இத்திட்டம் தமிழ்நாடு அரசால் முதல் முயற்சியாக சென்னை, மதுரை, கோவை, மூன்று மாநகராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

இதற்கான செலவினம் ரூ.2.60 கோடியினை TUFIDCO / TUIFSL நிறுவனம் மூலம் கடன் உதவி பெற்று அரசின் நிர்வாக ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .454**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 24) B30/ 03710 /08

மதுரை மாநகராட்சி எல்லைக்குள் சேரும் குப்பைகளை அள்ளுவதற்கு லாரி நிலையத்தில் உள்ள வாகனங்களுக்கு ஓட்டுனர்கள் போதுமான அளவில் மாநகராட்சியில் இல்லை என்பதால், மதுரை மாநகராட்சி வார்டுகளில் குப்பைகளை சேகரிக்கும் பணியினை மேற்கொள்ள தேவையான 50 இலகுரக ஓட்டுனர்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெறுவதற்கு ரூ. 20,62,500/- (ரூபாய் இருபது இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்)க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மதிப்பீடு ஒப்புதலுக்கும், ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கலாம் என்பதற்கும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று, அதன் பேரில் ஒப்பந்த அடிப்படையில் 50 இலகுராக வாகன ஓட்டுனர்கள், சப்ளை செய்ய உரிய நாளிதழில் விளம்பரம் வெளியிட்டும், இணைய தளத்தில் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிட்டும், ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டு, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்பச் சான்றுகள் மதிப்பாய்வுக் குழுவில் சரிபார்க்கப்பட்டு விலைப்புள்ளி கவர் (B கவர்) திறக்கலாம் என முடிவு செய்யப்பட்டு விலைப்புள்ளிகளுக்கான கவர் திறக்கப்பட்டு விலைப்புள்ளி பரிசீலனை செய்யப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள L 1 ஒப்பந்தக்காரர் M/s. குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி (க.எண். 12 C, திருவாப்புடையார் கோவில் சன்னதி தெரு, செல்லூர், மதுரை - 625 002) நிறுவனத்தார் 2007-08 ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.18% குறைவாக ஒரு இலகுரக ஓட்டுனருக்கு ரூ. 137.25 என விலைப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்றுக் கொள்ளவும், அன்னார்க்கு சப்ளை உத்திரவு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .455**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 25) அ 10/ 23014 /08

மதுரை மாநகராட்சி ஜெயகோபால் கரோடியா உயர்நிலைப்பள்ளியில் 6–ம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரை சுமார் 735 மாணவர்கள் பயின்று வருகின்றனர். மதுரை மாநகராட்சி பழங்காநத்தம் பகுதியில் ஏழை மக்கள் அதிகமாக வசித்து வருகின்றனர். அவர்களுடைய குழந்தைகள் மதுரை மாநகராட்சி பள்ளியில் பயின்று வருவதாலும், மேலும் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி பழங்காநத்தம் பகுதியில் இல்லாத நிலையில் ”ஜெயகோபால் கரோடியா பழங்காநத்தம்” உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தி பரிந்துரை செய்ய மாமன்ற ஒப்புதல் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .456**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 26) ம.பொ. 4/ 23002 /2008

மதுரை மாநகராட்சி மையபொறியியல் பிரிவு வடக்கு மண்டலம் வார்டு எண்.9 மதிச்சியம் ஜெகஜீவன்லாம் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உபயோகப்படுத்தாத கட்டிடத்தினை வயது முதிர்ந்த பெண் மனநோயாளிகளுக்கு மறுவாழ்வு மற்றும் தொழில்பயிற்சி வழங்க முனையும் M/s.செல்லமுத்து டிராஸ்ட் & ரிசர்ச் பவுண்டேஷனுக்கு வாடகை அடிப்படையில் வழங்க வரப்பெற்றுள்ள மனுவின் பேரில், அந்த அறக்கட்டளைக்கு வாடகை அடிப்படையில் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளான் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .457**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 27) ம.பொ. 7/ ம.எண்.852 /08-09

தேசிய நெடுஞ்சாலை பைபாஸ் ரோடு தீக்கதிர் அலுவலகம் முதல் நடராஜ் தியேட்டர் வரை சாலை அமைக்கும் பணியுடன் 68வது வார்டு நடராஜ் தியேட்டர் சர்வீஸ் சாலைக்கும் பைபாஸ் கீழ்புற சாலைக்கும் குறுக்கே இருப்பு பாதை (இரயில்வே டிராக்) இருப்பதால் அதையும் இணைத்து ஆள் இல்லாத அமைக்குமாறு இரயில்வே துறையினரே கேட்டு கொள்ள மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .458**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 28) ம.தி.1/22457/08

மதுரை மாநகராட்சி தல்லாகுளம் கிராமம், புல எண். 134/2A1-ல் கட்டுப்பட்ட நிலத்தில் உயர்நீதிமன்ற அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவது தொடர்பாக, நில உபயோகம் மாற்றம் கோரியதில் நகர் ஊரமைப்பு ஆணையர் மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் கோரியதன் பேரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மதுரை வீட்டு வசதிப் பிரிவு செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அதிகாரி கடிதம் எண். L.A.5850/2008, நாள் : 17.6.2008–ல் மாநகராட்சி தீர்மானம் கோரியுள்ளார்.

மேற்கண்ட இடம் புதூர் பாகம் II நகரமைப்பு திட்டப்பகுதியில் உள்ளது. பிரஸ்தாப இடம் பொது அலுவலகங்கள் கட்டப்படுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, பிரஸ்தாப இடத்தை குடியிருப்பு மனையாக நில உபயோக மாற்றம் செய்ய உள்ளூர் திட்டக்குழுமத்தின் மூலம் நகர் ஊரமைப்பு ஆணையருக்கு மேல் அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .459**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 29) ம.தி.1/21836/08

மதுரை மாநகராட்சி, பொன்மேனி கிராமம், RS.No.91-ல் கட்டுப்பட்ட 81 சென்ட் இடத்தில் ஏற்கனவே ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு ஒரு சென்ட் இடத்திற்கு பட்டா வழங்க இம்மாநகராட்சியின் ஆட்சேபணையில்லா சான்று கோரி மதுரை தெற்கு வட்டாட்சியர் ந.க.எண். 15627/08/சி3 நாள் : 6.6.2008ந் தேதிய கடிதம் வரப்பெற்றுள்ளது. இந்த இடம் சர்வே ஆவணங்களில் சம்மட்டிபுரம் மெயின் ரோடு என உள்ளது. இந்த இடத்தில் தற்போது திருமதி. எஸ். பொன்னுத்தாய் என்பவர் குடியிருந்து வருகிறார் பிரஸ்தாப ஆக்கிரமிப்பு குடிசை சமுதாயக் கூடத்திற்கும், வெள்ளைக்கண்ணு தியேட்டர் காம்பவுண்டு சுவருக்கும் இடையில் அமைந்துள்ளது. ஆகவே, பட்டா வழங்க தடையில்லா சான்று வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .460**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக்கூட்டம் நாள் : 27.6.2008

# Out of Agenda

## 1) மதி1/ 18356/2008

மதுரை மாநகராட்சி, கார்ப்பரேசன் வார்டு 28, மேற்கு மதுரை கிராமம் சர்வே வார்டு எண். V, பிளாக் எண்.20, நகர நில புல எண். 62 (பழைய நகர புல எண் 1617/3B(P)ல் விஸ்தீரணம் 0.1650 ச.மீட்டர் (40.3/4 செண்ட்) சர்வே வார்டு V, பிளாக் எண். 51, நகர புல எண். 35 ( பழைய நகர புல எண். 1617/1A(P)-ல் விஸ்தீரணம் 0.5865 ச.மீட்டர் (ஏக்கர் 1 செண்ட் 44.3/4 செண்ட்) மற்றும் பொன்மேனி கிராம RS.No.25-ல் விஸ்தீரணம் 57 செண்ட் ஆக மொத்தம் ஏக்கர் 2 செண்ட் 42.1/2க்கு உள்ள இடத்தில் ஆக்கிரமித்துள்ளவர்களுக்கு அரசாணையின்படி பட்டா வழங்க மாநகராட்சியின் கருத்தினை தீர்மான வடிவில் அனுப்பி வைக்குமாறு கோரிய மதுரை தெற்கு வட்டாட்சியர் ந.க.எண். 4661/2008/சி3, நாள் : 25.2.08 வாசிக்கப்பட்டு மேற்படி இடத்தை நகரளவரால் புலத்தணிக்கை செய்யப்பட்டதில் மேற்படி நகர புல எண்கள் ஏக்கர் 2 செண்ட் 42.1/2 உள்ள நிலம் வாய்க்கால் புறம்போக்கு இடமாகும். மேற்படி இடத்தில் ஆக்கிரமித்து வீடு கட்டி குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபணையில்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .461**

**பிரஸ்தாப இடம் வாய்க்கால் புறம்போக்கு என்று குறிப்பிட்டுள்ளதால், மீண்டும் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும், இடத்தையும் ஆய்வு செய்து மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கிறது.**

## 2) அ10/13857/08

மதுரை மாநகராட்சி பள்ளிகளில் 10ம் வகுப்பு 12ம் வகுப்பில் பயிலும் மாணவ / மாணவியர்கள் அதிக மதிப்பெண் பெற ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் மாநகராட்சி பள்ளிகளில் முதல் 25 இடங்களில் இடம் பிடிக்கும் மதுரை மாநகராட்சி பள்ளிகளின் மாணவ / மாணவியர்களுக்கு பரிசு வழங்க இத்திட்டம் முதன் முறையாக மதுரை மாநகராட்சி பெருமையுடன் அறிமுகப்படுத்துகிறது.

அதன்படி 2007–2008ம் கல்வி ஆண்டில் 10ம் வகுப்பு 12ம் வகுப்பு அரசு பொது தேர்வில் மதுரை மாநகராட்சி பள்ளிகளில் இருந்து தேர்வு எழுதிய மாணவர்களில் மாநில அளவில் முதல் 25 இடங்களில் இடம் பிடித்த கீழ்கண்ட மாணவ / மாணவியர்களுக்கு மதுரை மாநகராட்சியின் சார்பாக

1. 10ம் வகுப்பில் மாநில அளவில் முதல் 25 இடங்களில் இடம் பிடித்த கீழ்கண்ட மாணவிகளுக்கு

| வ.எண். | மாணவியரின் பெயர் | பள்ளியின் பெயர்கள் | பெற்ற மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | எஸ்.ஜஸ்மிதா பானு | ஈ.வெ.ரா. நாகம்மையார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி | 484/500 |
| 2 | ஜி. ரேவதி | ஜெயகோபால் கரோடியா பழங்காநத்தம் உ.நி.பள்ளி | 481/500 |

உயர்கல்வி பயில (மேல்நிலைக் கல்வி / பாலிடெக்னிக் கல்லூரி) ஒவ்வொருவருக்கும் ரூ.5000/- வழங்கவும்,

2. 12ம் வகுப்பில் மாநில அளவில் முதல் 25 இடங்களில் இடம் பிடித்த கீழ்கண்ட மாணவிக்கு

| வ.எண். | மாணவியரின் பெயர் | பள்ளியின் பெயர்கள் | பெற்ற மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | சி. வைஷ்ணவி | அவ்வை பெண்கள் மேல்நிலைப்பள்ளி | 1142/1200 |

உயர்கல்வி பயில அரசு நிர்ணயம் செய்த கல்வி கட்டணம் மற்றும் புத்தகங்கள் வழங்குவதற்கு உரிய தொகையும் வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .462**

**உயர்கல்வி பயில அரசு நிர்ணயம் செய்த கல்வி கட்டணம் மற்றும் புத்தகங்கள் வழங்குவதற்கு உரிய தொகையும், குறிப்பில் கண்டவற்றுடன் சேர்த்து ஒரு லேப்டாப் கணினி +2 மாணவ, மாணவியர்களுக்கு மட்டும் வழங்கவும் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**வணக்கத்குரிய மேயர் அவர்களின் தீர்மானம்**

**மாமன்ற தீர்மானம் எண் .463**

**28.5.08 அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் சொத்துவரி உயர்வு செய்துள்ளது சம்பந்தமாக அனைத்துக்கட்சி மாமன்ற உறுப்பினர்களும் பல்வேறு கருத்துக்கள் தெரிவித்துள்ளதை ஆழ்ந்து கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.1,477 கோடி மதிப்பீட்டில் மதுரை மாநகர பகுதியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்படுத்துவதற்கு ஏதுவாக மத்திய. மாநில அரசிடம் மானியமாகவும். கடனாகவும் பெற்று செயல்படுத்தப்பட்டு வருவதால். சொத்துவரி மூலம் கிடைக்கும் வருவாயில் இந்தக் கடனை திருப்பிச் செலுத்துவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது, மதுரை மாநகராட்சியில் இதுவரை 700 பேருக்கு மேல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளனர். ஜீன் 2008 மாதத்தில் மட்டும் 98 பேர் ஓய்வு பெறுகின்றனர், மேலும் 7-வது ஊதியக்குழு மூலம் பணியாளர்களுக்கு சம்பளம் கூட்டும் போது. இன்னும் கூடுதலான செலவினம் ஏற்பட வாய்ப்பு உள்ளது, மொத்த வருவாயில் ஊழியர்களின் சம்பளம் 49%-க்கு கூடுதலாக ஆவதால். காலியாக உள்ள இந்தப் பணியிடங்களை நிரப்ப இயலவில்லை, இதனால் மாநகராட்சி பணிகளில் தேக்கம் ஏற்படுகிறது, எனவே சொத்துவரி விதிப்பில் பொதுமக்கள் பாதிக்காத வகையில் குடியிருப்புக்கு வரி உயர்வு 25% என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதை 20%-ஆக குறைத்து தீர்மானமாக அறிவிக்கப்படுகிறது, அனைவரும் மனமுவந்து ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்,**

**இத்துடன் கூட்டம் முடிவுற்றது.**